**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**MCOP.No.38/2018**

**Deposition of: R.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** ஜெயராமன் | **Father Name :** | |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Religion** | **:** |
| **Calling** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on Date: 07.12.2023 at 12.45 p.m to 12.50 p.m.**

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கின் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக உள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். ஆவணம் எமசாஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

1) விபத்து சமயத்தில் மேற்படி நெல் அறுவடை இயந்திரமான TN 54 Z 8458 க்கு எங்கள் நிறுவனத்தில் முறையான காப்பீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டி வந்தவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வானத்தை ஓட்டுயவர் வேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் டயர் வெடித்ததால் விபத்து நடந்தது என்று தான் மேற்படி விபத்து விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது.

2) மேற்படி சாலையில் உள்ள இரும்பு கிரில் மீது மோதிதான் விபத்து நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஓட்டுநர் ரூ.2000/- அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுதாரர் அந்த வாகனத்தில் அமர்ந்து சென்றதால் விபத்து ஏற்படவில்லை என்றால் அவர் அனுமதிக்கப்படாத பயணியாக பயணித்து விபத்து ஏற்பட்டது. மேற்படி மனுதாரர்

வாகனத்தை பொறுத்தவரையில் 3ம் தரப்பினர் என்றால் அவர் பயனியாக அந்த வாகனத்தில் பயனிக்க அனுமதி இல்லை. மேற்படி காப்பீடு விதிமுறை மீறப்பட்டிருந்தால் நாங்கள் இழப்பீட்டை செலுத்திவிட்டு உரிமையாளரிடம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அது தவறு.

**1,2** எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கான இழப்பீடை 3ம் எதிர்மனுதாரர் தான் செலுத்தவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal**
**Attur.**